MUNICIPAL ADMINISTRATION
29 OCT 2010
CHEPAUK, CHENNAI

## சுருக்கம்

நிலம் – வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகுசாலை அமைக்க இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தனியாருக்குச் சொந்தமான 6300 சதுரடி நிலத்தினை கிரையம் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் அதற்கான செலவினத் தொகை ரூபாய் 20,06,052/–யினை வந்தவாசி நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவழிக்கவும் அனுமதி அளித்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை(நிலை) எண்.267 நாள்: 28.10.2010.

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.23320/ 2010/ டிபி2, நாள் 6.9.2010 மற்றும் 19.10.2010.

ஆணை:

மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், வந்தவாசியில் அமைக்கப்பட்டுவரும் புதிய பேருந்து நிலையத்தின் அணுகுசாலையில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படாமல் இருக்க மாற்று அணுகுசாலை அமைக்க பொதுப்பணித் துறை கரை, மந்தவெளி புறம்போக்கு, இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடம் மற்றும் தனியார் நிலங்கள் கண்டறியப்பட்டு, வந்தவாசி நகர மன்றத் தீர்மான எண்.212, நாள் 28.1.2009–ல் இதற்கான அனுமதி வழங்கியுள்ளது என்றும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் கருத்தின்படி மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்படி 150 சதவிகித தொகையினை வந்தவாசி நகராட்சி செலுத்த நகர்மன்றத் தீர்மான எண்.225, நாள் 18.11.2009–ல் அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 901 சதுர மீட்டர் நிலத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க நடவடிக்கையில் உள்ளதாகவும், தனியருக்குச் சொந்தமான 5399 சதுர மீட்டர் நிலத்தினை நகராட்சிக்கு அளிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி தனியார் நிலங்களை ரூ.14,72,875/– மதிப்பீட்டிலும் இந்து சமய அறநிலைய துறையின் நிலத்தினை ரூ.3,67,540/– மதிப்பீட்டிலும், பத்திரப் பதிவு கட்டணம் 8 சதவீதம் சேர்த்து மொத்தம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அணுகுசாலை அமைக்க நிலம் வாங்குவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிலம் வாங்க தேவைப்படும் செலவினமான ரூபாய் 20,06,052/–யினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகராட்சி ஆணையர், வந்தவாசி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் தனியார் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் நிலங்களின் நிலக் கிரையத் தொகையாக ரூபாய் 18,40,415/– (ரூ. 14,72,875/– + ரூ. 3,67,540/–) 8 சதவீதம் முத்திரைப் பதிவுக் கட்டணமாக ரூ.1,47,233/– மேலும் பத்திரப் பதிவுக் கட்டணம் ரூ.18,404/– ஆக மொத்தம் ரூபாய் 20,06,052/–க்கு நிர்வாக அனுமதியும், மேற்படித் தொகையினை வந்தவாசி நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அரசின் அனுமதியும் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் மேற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின், வந்தவாசி நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு அணுகு சாலை அமைக்க தேவைப்படும் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான 901 சதுர மீட்டர் மற்றும் தனியருக்குச் சொந்தமான 5399 சதுர மீட்டர் ஆக மொத்தம் 6300 சதுர மீட்டர் நிலத்தினை வந்தவாசி நகராட்சிக்கு கிரையம் பெறவும், அதற்கான செலவினத் தொகை ரூ.20,06,052/-யினை (ரூபாய் இருபது இலட்சத்து ஆறாயிரத்து ஐம்பத்திரண்டு மட்டும்) வந்தவாசி நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
ஆணையர், இந்து அறநிலையத் துறை, சென்னை.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், வந்தவாசி நகராட்சி.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18.(பெயரிட்ட உறையில்)

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி.2) துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 28/10/10.

To
The RDMA, Vellore
The M.C., Vandavasi

भारतीय राष्ट्रिय राजमार्ग प्राधिकरण
**National Highways Authority of India**
(सड़क परिवहन और राजमार्ग मंत्रालय)
**(Ministry of Road Transport and Highways)**
परियोजना कार्यान्वयन इकाई (पत्तन संयोजंन)
**Project Implementation Unit (Port Connectivity)**
8 वाँ तल, एनेक्स बिल्डिंग, स्पिक हाउस, 88 माउंड रोड, गिन्डी, चेन्नै - 600 032. 8th Floor, Annex Building, SPIC House, 88, Mount Road, Guindy, Chennai - 600 032.

टेली फैक्स / Tele Fax : 91-44-2235 4133
ई-मेल / E.mail : chennaiport@nhai.org
chennaiport@rediffmail.com

NHAI/CEPC/SOU/EEW/2006-07/ 4121

26th October, 2010

To

**The Municipal Commissioner,**
**Tiruvottiyur Municipality,**
Chennai – 600 019.

**Sir,**

**Sub : NHAI – PIU Chennai (Port Connectivity) – Development of adequate road connectivity to Chennai & Ennore Ports – Improvements and widening to 4 lanes of 1.6 km of Ennore Expressway – Shifting of utilities of Tiruvottiyur Municipality – Status of work – Reg.**

**Ref : 1.Letter No.CEPC/SOU/2001-02/4079 Dated 07.10.2010 of this Office.**
**2.Letter Roc.No.313/08/E1 Dated 29.09.2010 of Commissioner, Tiruvottiyur Municipality, Chennai – 19.**
**3.Letter No.CEPC/SOU/EEW/2006-07/3784 Dated 04.05.2010 of this Office.**

*******

Kind attention is invited to the letter 2nd cited above wherein it was informed by the Commissioner, Tiruvottiyur Municipality that the tenders were called for the above work on 21.10.2010. The present status may kindly be furnished.

In this regard, it is informed that the bids were invited for the widening of Ennore Expressway and last date for receipt of bids is 25.11.2010. The road work is expected to be commenced within this financial year.

It is further informed that based on the request of the Municipal Commissioner, Tiruvottiyur Municipality, an amount of Rs.112.56 lakhs was remitted to Tiruvottiyur Municipality on 04.05.2010 towards shifting of Water supply, Electrical Utilities and other affected assets of the Municipality in Ennore Expressway.

In view of the above, it is requested that shifting of utilities, pipelines, poles etc. may be completed before the commencement of road work so as to avoid payment of compensation to the Contractor due to this.

It is therefore requested to make arrangement to instruct the concerned officials of Tiruvottiyur Municipality to carry out the shifting work at an early date, so that the project can be completed in time.

Yours faithfully,

26/10/10

**(P.T.Mohan)**
**Project Director**

Copy to:1. The Secretary to Government, Highways & Minor Ports, Secretariat, Chennai (by Name).
2. The Director, Municipal Administration, Elizhagam, Annex Building, 6th Floor, Chennai-5, (by Name).
3. The Team Leader, TNRDC Ltd., Chennai-8, for further necessary action.

F:\Commissioner, Tiruvottiyur Municipality.doc